அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 22/2016(I)

எனது இலக்கம் : CS/SLAS/LANG
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2022.01.10

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்

**<u>2006.03.01 ஆந் திகதி முதல் 2007.07.01 ஆந் திகதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் III ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்வதற்கான சலுகை வழங்குதல்</u>**

2006.03.01 ஆந் திகதி முதல் 2007.07.01 ஆந் திகதி வரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் III ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு, அவர்களின் நியமனக் கடிதத்துக்கு ஏற்ப பூர்த்தி செய்திருக்க வேண்டிய மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை (இரண்டாம் மொழி) உரிய திகதியில் பூர்த்தி செய்யத் தவறியதை கருத்திற் கொள்ளாது 2023.10.16 ஆந் திகதி வரை சம்பள ஏற்றத்தை வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

02. மேலும், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 22/2016 இன் பிரகாரம் நியமனக் கடிதத்தின் படி மற்றைய அரசகரும மொழி, அதாவது தமிழ்/ சிங்கள மொழி தேர்ச்சியைப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதிக்குப் பின்னர் உரிய தகைமையை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

I. இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணத்தின் இடைக்கால ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் 2017.12.31 திகதி வரை தரமுயர்த்தல்களை வழங்கும் போது II ஆந் தரத்துக்குரிய பதவியுயர்வு, மற்றைய அரசகரும மொழியின் தேவைப்பாட்டினை (இரண்டாம் மொழி) பூர்த்தி செய்வதற்காக அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 22/2016 இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய

திகதியில் இருந்து மேலதிகமாக எடுக்கப்படும் காலத்திற்குச் சமனான காலத்தால் தாமதமடைதல்

II. இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணத்தின் இடைக்கால ஏற்பாடுகள் முடிவடையும் 2017.12.31 ஆந் திகதிக்குப் பின்னர் தரமுயர்த்தல்களை வழங்கும் போது 2023.10.16 ஆந் திகதிக்கு முன்னர் மற்றைய அரசகரும மொழித் தேவைப்பாட்டினை (இரண்டாம் மொழி) பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் 2018.01.01 ஆந் திகதிக்கு குறித்த தேவைப்பாட்டினை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

03. இச்சுற்றறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு